OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 18.2.2020

Accepted: 10.3.2020

Published: 01.04.2020

Citation:
Singaravelu, K. (2020). "Kadukkai Seed as Beyond the Values of Mother." *Shanlax International Journal of Tamil Research*, 4(4), 88–93.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2359

*Corresponding Author:
tamilsingam80@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kadukkai Seed as Beyond the Values of Mother

**Dr. K. Singaravelu***
*Assistant Professor, Department of Tamil*
*Thiruvalluvar University, Vellore, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-9242-1854

**Abstract – A Study of Select Poetry of Chithargal**: The objective of this research is to bring out the comparision between the medicinal values as inherent in the kadukkai seed which is portrayed by chittargal in their version as they are beyond the values of mother and how did chittargal portray "kaayakalpam" herbals. kadukkai seed is one of the herbal belonging to the category of kaayakalpam. Above all it is further glorified as "kadu and amudham" by the ancient poets in Tamil literature.

**Key Words:** Tamil medical system, Siddha treatment, Tamil siddhars, Kadukkai, Medical use.

## References

1. Murugesa Mudaliyar. *kunapaadam Porutpanbu Nool*. Indian medician and Omiyopathi Thurai, Chennai.
2. Thiyagarajan R. *Sidhdha Maruththuvam Sirappu*. Indian medician and Omiyopathi Thurai, Chennai.
3. Ramasamy. (2000). *Arputha Mooligaigal Aaru*. Arasu Sidhdha Maruththuva Kalloori, Palayankottai.
4. Mohan R.C. (1999). *Thiruvalluvar Gnavettiyan 150*. Thamarai Noolagam, Chennai.
5. Venkatara Baalu. (2011). *Chittarkalin kaayakalpa Mooligaigal Aaru*. narmatha Pathippagam.
6. Srinivasan. G. (2010). *Sanga ilakkiya Thaavarangal*. Thanjai Tamil University.
7. Ramachandran S.P. (1869). *Pogar Nigandu 1200, Moolamum Uraiyum*. Thaamarai Noolagam, Chennai.
8. Manivaasagar. (2009). *Thirumanthiram Moolamum Uraiyum*.
9. Ramachandran S.P. (1869). *Pogamunivar vaiththiya kaaviyam 100*. Thaamarai Pathippagam, Chennai.
10. Piliyur Kesigan, *Purananooru Thelivurai*. Senbaga Pathippagam, Chennai.
11. Sundara Sanmuganar. (1989). *Marunthaagi Thappa Mara inappeyargal*. Painthamizh Pathippagam, Puduchery.

# தாயினும் மேலான கடுக்காய்

***க. சிங்காரவேலு***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்*** – *மானிடவாழ்வில் தாயே தெய்வத்திற்கும் மேலானவளாக மதிக்கப்படுகிறாள். ஆனால் சித்தர் தாயைக் காட்டிலும் மேன்மை உடையதாக காயகல்ப மூலிகைகளில் ஒன்றான கடுக்காயினைச் சிறப்பிக்கின்றார். அவ்வாறு சிறப்பிப்பதற்கான காரணங்கள், கடுக்காயின் வேறு பெயர்கள். கடுக்காயிலுள்ள வகைகள், ஒவ்வொரு வகை கடுக்காயினிலுள்ள மருத்துவ மூலப்பொருட்கள் பொதுவாக எந்நோய்களுக்கு பயன்படுகிறது, சிறப்பு மருந்துப்பொருளாக எந்நோய்களுக்கு பயன்படுகிறது என்பதை சித்தர்களான அகத்தியர், தேரையர், போகர், திருவள்ளுவர் போன்றோர்களின் நூல்களோடு ஒப்பிட்டு அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் மருத்துவம், சித்த வைத்தியம், கடுக்காய், கடுக்காயின் வகைகள், குணமாகும் நோய்கள்.*

**“கடுக்காய் தின்றால் மிடுக்காய் வாழலாம்”, “ஈனாத மாட்டுக்கு ஒரு கடுக்காய் இளம்பிள்ளை தாய்ச்சிக்கு ஏழு கடுக்காய்”** என்பது கடுக்காயின் சிறப்பை உணர்த்தும் பழமொழிகளாகும். கடுக்காயினை அமுதம் எனத்திருமூலர்குறிப்பிடுகின்றார். கடுக்காய் உடலை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல் உடலிலுள்ள நோய்களையும் போக்கும் தன்மையுடையது. கடுக்காயின் மருத்துவ குணத்தைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கடுக்காயின் குடும்பம்

கடு என்று சிறப்பிக்கப்படும் கடுக்காயின் மருத்துவப் பயன்களைப் பற்றி தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை,

**வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்**
**(தொல்:417)**
**கடுகலித்து எழுந்த கண் அகழ் சிலம்பில்**
**(மலைபடு:14)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். கடுக்காயை சங்ககால மக்கள் நீரை தெளிவிக்கும் பொருளாகவும் பயன் படுத்தியுள்ளனர் என்பதை,

**யாங்கஃ டுண்டென வறிது மாசின்று**
**(புறம்: 319:4)**

என்ற பாடல் வரி மூலம் அறியமுடிகிறது. இம்மரம் திருக்குறுகை வீராட்டம் கோவிலின் வழிபாட்டு மரமாகவும் உள்ளது.

இது பூக்கும் இருவித்திலைத் தாவர வகையை சார்ந்தது ஆகும். இதன் தாவரப் பெயர் டெர்மினாலியா சிபுலா (Terminalia chebula) என்பதாகும், இது வறண்ட மலைப்பகுதிகளில் வளரும் இயல்புடையதாகும்.

## கடுக்காயின் வேறுபெயர்கள்

கடுக்காயினை கடுக்காய் என்று கூறுவது நாட்டுப்புற வழக்காகும். சித்தர்கள் கடுக் காயினை அக்கேனம், அங்கணம், அந்தன், அபரணம், அபயன், அமரிதம், அமலை, அமுதம், அம்மை, அம்ருதா, அரபி, அரிதகி, அலியன், அவ்வியதா, இரேசகி,

ஏமவதி ஐயவி, சீவப்பிரியா, சிவா, கடு, விசயதேவன், வயதரன், சேயா, வரிக்காய், வனதுர்க்கி, நந்திரி, நெச்சி மேகம்பாரியம், சேதநிகா, சிரோட்டம், ரோகிணி எனப் பல பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

**கடுக்காயின் வகைகள்**

மருந்தாகப் பயன்படும் கடுக்காயினை ஏழு வகையாக அகத்தியர் பிரித்துள்ளார். இதனை அகத்தியர் குணபாடம்,

**ஆதிவிசயன்அரோகிணியோடேபிருதவி**
**தீதில் அமிர்தை சிவந்திமலை – மீதார்**
**திரிவிருததீயபயன்செப்பிலிவையேழாம்**
**அரிதகியின் பேதம் அறி (அ.கு)**

என்ற பாடல் மூலம் 1. விசயன் கடுக்காய் 2. அரோகிணிக் கடுக்காய் 3. பிருதிவிக் கடுக் காய் 4. அமிர்தக் கடுக்காய்` 5.சிவந்திக் கடுக் காய் 6. திருவிருத்திக் கடுக்காய் 7. அபயன் கடுக்காய் போன்ற வகைகள் உள்ளதை அறியமுடிகிறது. மேலும் கடுக்காயில் வரிக்கடுக் காய், பால் கடுக்காய், மஞ்சள் கடுக்காய், செங்கடுக்காய் போன்ற வகைகளும் உண்டு.

**கடுக்காயிலுள்ள வேதிப்பொருட்கள்**

**“சுக்குக்குப் புற நஞ்சு”**
**“கடுக்காய்க்கு அக நஞ்சு”**

என்னும் பழமொழிக்கேற்ப சுக்குக்கு புறத்தோல் நஞ்சாகும். கடுக்காய்க்கு கொட்டையிலுள்ள பருப்பு நஞ்சாகும் அதனை நீக்கி பயன்படுத்த வேண்டும். ஆயினும் கடுக்காய் பிஞ்சு கண்நோய்க்கு மருந்தாய் பயன்படுகிறது. இவற்றில் டேனின்கால்கோலிக் ஆசிட், சிபுலிக் ஆசிட், குளுக்கோஸ், எத்தில் காலெட், லுயுட்டின், வைட்டமின் சி, அமினோ ஆசிட், புரோட்டின், பிலவனாஸ், கிளைக்கோசைட், காலிக் ஆசிட், செலினியம் ஆகிய தாவரச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

**கடுக்காயின் சுவை**

கடுக்காயின் பொதுவான சுவை துவர்ப்பாகும். ஆயினும் அறுசுவைகளில் உவர்ப்பு சுவை தவிர ஐவகை சுவைகளும் உண்டு. கொட்டையானது துவர்ப்புச்சுவையும், பருப்பு இனிப்புச்சுவையும், நரம்பு புளிப்புச்சுவையும், தோல் கார்ப்புச்சுவையும், காம்பு கைப்புச்சுவையுடையதாகவும் உள்ளது.

**கடுக்காயின் மருத்துவப்பயன்கள்**

**பொது மருத்துவப்பயன்கள்**

தமரக நோய், குருதி யழல், அடிபட்ட புண், கன்னம் கழுத்து, காலடிப்புற்று நோய், ஆண்குறி நோய்கள், காமாலை போன்ற நோய்கள் நீங்கும் என்பதை அகத்தியர் குணபாடத்தில்,

**தாடை கழுத்தக்கி தாலு குறியிவிடப்**
**பீடை சிலிபதமுற் பேதிமுடம் –**
**ஆடையெட்டாத்**
**தூலமிடி புண்வாத சோணிகா**
**மாலையிரண்**
**டுலமிடி போம் வரிக்கா யால் (அ.கு)**

என்ற பாடலடிகளால் அறியலாம். மேலும் மாலையில் கடுக்காய் தூளை நல்ல தண் ணீருடன் கற்பமாக உண்டு வர மன நோய் நீங்குவதோடு சுக்கிலத்தையும் கட்டும் தன்மையுடையது என்பதை,

**காலமே பிஞ்சியுண்ணக் காட்டினார் சூத்திரத்தில்**
**மாலையதி லேகடுக்காய் மத்தியானஞ் சுக்கருந்த**
**சூலமே தேகமடா சுக்கிலத்தை கட்டிவிடும்**
**ஞாலமே லுனது விந்து நற்றேங்காய்**
**போலோமே**

எனத் திருவள்ளுவர் நாயனார் கற்பம் 300 வது பாடல் விளக்குகின்றது.

தீப்புண்களை ஆற்றும் தன்மையாகவும், பாக்டீரியா எதிரூக்கி, புஞ்சை எதிரூக்கி, வைரஸ் எதிரூக்கியாகவும் கிருமி நாசி னியாகவும் கடுக்காய் பயன்படுகிறது.

**சிறப்பு மருத்துவப் பயன்கள்**

நரம்புத்தளர்ச்சி, இதயநோய்கள், பற்சிதைவு நோய்கள், இருமல், ஆஸ்துமா, கண்நோய், சர்க்கரை நோய், புற்று நோய் போன்ற நோய்களுக்கு சிறப்பு மருந்தாக செயல்புரிகிறது கடுக்காய் மஞ்சள் காமாலைக்கு சிறப்பான மருந்தாகப் பயன்படுகிறது என்பதை,

**மாலைக் கடுக்காய் வருணத் துடனுணக்கா**
**மாலைக் கடுக்காய் மகோதரம் போம்**
**(அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

கடுக்காயைத் தூள் செய்து தினமும் ஒரு நிலக்கடலை அளவு உண்டு வந்தால் சீதம், வாதநீர், பித்தநீர், கபநீர் நீங்கி காயசித்தி உண்டாகும் என்பதை,

**வனதுர்க்கிச் சேய்க்கு மணித்தயிலம் புசி**
**அனலிற் பொரித்தாங் கருந்தத் - தினமுமலச்**
**சிக்கலக்க டுப்பநின்ற சீதமறும் காற்றுகைத்த**
**முக்கலக்க கடுப்பிருக்கு மோ**
**(அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

கடுக்காய் பிஞ்சு மலச்சிக்கலைப் போக்கும் தன்மையுடையது மூலநோய்க்கான மருந்தாகவும் உடல் வலுப்பெறவும் உதவுகிறது என்பதை,

**சொல்லு மரிதகி மேற் றோலை மதுவுடனே**
**யல்லும் பகலு மயிலவே – கல்லுங்**
**கரைய வுரமெழப்புங் காயசித்தி யுண்டாம்**
**நரையுந் திரையுமிலை தை**

என்ற தேரன் வெண்பா பாடலடிகள் விளக்குகின்றன.

**விசயன் கடுக்காயின் மருத்துவம்**

விசயன் கடுக்காய் பேய்ச்சுரையை போன்று காணப்படும். இது வளி நோய்களையும் நோய்களையும் நீக்கும் தன்மையுடையது என்பதை,

**விசயன் எனுங்கடுக்காய் வீரியத்தைச் சொல்வோம்**
**நிசமதுதான் வாதத்தை நீக்கும் - மிசையுரைக்கப்**
**பேய்ச்சுரைக்காய் போலிருக்கும் பேரவந்தி யாதேசம்**
**வாய்ச்சிருக்கு மக்காயை வாழ்த்து (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**அரோகிணிக் கடுக்காயின் மருத்துவம்**

அரோகிணிக் கடுக்காய் கன்னியாகுமரி பகுதிகளில் விளையும் தன்மையுடையது. இது வட்ட வடிவமும் நான்கு வரிகளுடனும் காணப்படும். சிறியவகை காயாகினும் கொட்டை பெரிய அளவில் காணப்படுகிறது. இக்கடுக்காய் முப்பிணிகளையும், ஐயக்குற்றத்தையும் போக்கும் தன்மையுடையது, இதனைப் புண்களுக்கும் பற்றிடலாம் என்பதை,

**ஓதும் அரோகிணிக்கா யொன்றுண்டா னாற்சந்நி**
**பாதமொடு சீதம் பறக்குங்காண் - மீதுகுறி**
**நான்குவரி யாய்த்தோற்று நங்கா! அதன்றேசம்**
**ஆங்குகன்னி யாகுமரி யாம் (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**பிருதிவிக் கடுக்காயின் மருத்துவம்**

பிருதிவிக் கடுக்காய் சௌராட்டிரத்தில் வளரும் தன்மையுடையது. இதனுடைய காய்கள் மெல்லிய தோலுடன் காணப்படும். அது அழல் நோயை போக்கும், உயிரை வளர்க்கும் என்பதை,

**தோற்றம் பிருதிவிதான் தோலாப் பறித்தியத்தை**
**மாற்றும் வயதை வளர்க்குமதன் - மேற்றோலோ**
**மெல்லியதாம் அக்காய் விளைதேசம் ஏதென்னில்**
**வல்லசவு ராட்டிகமாம் வாழ்த்து (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**அமிர்தக் கடுக்காயில் மருத்துவம்**

அமிர்தக் கடுக்காய் காசியில் வளரும் தன்மையுடையது. இதன் காய் சதைப் பற்றுள்ளது, இக்காய் ஐயத்தைப் போக்கும், கழிச்சலை அதிகமாக உண்டாக்கும். மேலும் மருந்துகளை உண்டு இளைத்த உடலுக்கு நன்மையை செய்யும். இந்த அமிர்த சேதகி கடுக்காயின் மனமே கழிச்சலை உண்டாக்கும்.

இதனை,

**அமிர்த மெனுங் கடுக்காய் அம்புவியி லுள்ள**
**திமிர்தசி லேட்டுமத்தைத் தீர்க்கும் - விமிதச்**
**சதைப்பற்றுண் ளடாயிருக்குஞ் சாற்றிலதன் றேசங்**
**கதிக்கொத்த காசியென்பன் காண் (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**சிவந்திக் கடுக்காயின் மருத்துவம்**

சிவந்திக் கடுக்காய் காடுகளில் வளரும் தன்மையுடையது. இதன் காய் பொன்னிறமுடையது. இது மூலத்தை போக்கும், மற்ற நோய்களுக்கும் இதனைக் கொடுக்கலாம் என்பதை,

**சிவந்தி எனுங்கடுக்காய் செய்குணத்தைக் கேள்வா**
**யுவத்தமூ லத்தையெலாம் ஓட்டுஞ் - சிவந்திப்**
**போன்னிறம தாயிருக்கும் புங்குழலே! ஆந்தக்காய்**
**என்னுவனந் தோறுமுண்டாஞ் சொல் (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**திருவிருத்திக் கடுக்காயின் மருத்துவம்**

திருவிருத்திக் கடுக்காய் மலைகளில் வளரும், இது மூன்று நரம்புடையது, ஐந்து நிறமுடையது ஆகும். இது புண்களை போக்கும் தன்மையுடையது என்பதை,

**திருவிருத் திக்கடுக்காய் தேகத்தில் நாளும்**
**வருவிரணம் போக்குமதன் வன்னம் - ஒருவிதமோ**
**பஞ்சவன்னம் மூவரம்பு பற்றி யிருக்குமது**
**விஞ்சுமலை தோற்றுமுண்டாம் விள் (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**அபயன் கடுக்காயின் மருத்துவம்**

அபயன் கடுக்காய் பொதிகை மலையில் வளரும். இதன் காய் ஐந்து கீற்றுகளுடன் கருப்பு நிறமாக உருண்டு இரண்டு அங்குல நீளத்திற்கு இருக்கும். வறட்சியான தன்மை உடையது. இக்காயினால் அங்கநோய்கள், கண் நோய்கள் ஆகியவை நீங்கும், மேலும் கோழையையும் மலத்தையும் போக்கும் தன்மையுடையது என்பதை,

**அபயன் எனுங்கடுக்காய் அங்கநோ யெல்லாம்**
**அபயமிட் டோட அடிக்கும் - அபயற்**
**கதிக நிறங்கறுப்ப தாகுவிளை புமி**
**பொதிய மலையாம் புகழ் (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**கடுக்காயின் சிறப்பம்சங்கள்**

தாயானவள் குழந்தைக்கு உணவை ஊட்டி மட்டுமே உடலைக் காப்பாள். ஆனால் கடுக்காயோ அறுசுவைகளையும் தந்தும் உடற்பிணிகளை போக்கி உடலைத் தேற்றும் தன்மையுடையது என்பதால் அகத்தியர் தாயைக்காட்டிலும் மேலானது கடுக்காய் என்று சிறப்பிப்பதை,

**கடுக்காயுந் தாயுங் கருதிலொன்றென் றாலும்**
**கடுக்காய் தாய்க்கதிகங் காண் நீ - கடுக்காய்நோய்**
**ஓட்டி யுடற்றேற்றும் உற்றவன்னை யோசுவைகள்**
**ஊட்டியுடற் றேற்று முவந்து. (அ.கு)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

கடுக்காய் நரை திரை மூப்பினை வென்று காயசித்தியைப் பெறச்செய்வதாகும். இதனை நீர் தெளிவிக்கும் பொருளாகச் சங்க கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

சங்க இலக்கியங்களில் கடு என்றும், சித்தர்களினால் அமுதம், புதவாசகன், வனதுருக்கி எனப் பல்வேறு பெயர்களில் சிறப்பிக்கப்படுவதன் மூலம் கடுக்காயின் மருத்துவத்தன்மையை அறியமுடிகிறது.

கடுக்காயில் பத்துக்கும் மேற்பட்ட கடுக்காய்கள் உண்டு என்பதைச் சித்தர் பாடல்களால் அறியமுடிகிறது.

கடுக்காயின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் ஒரு மருத்துவத் தன்மையுண்டு, இவை வாத பித்த கப நோய்களை போக்கும் தன்மையுடையது என்பதை அறியமுடிகிறது.

கடுக்காயில் வைட்டமின் சி, புரோட்டின், அமினோ ஆசிட், காலிக் ஆசிட் போன்ற வேதிப்பொருட்கள் உள்ளதால் மருந்துகளின் அரசன் என்று சிறப்பிக்கப் படுகிறது.

கடுக்காய் பொதுவாக அனைத்து நோய்களுக்கும் மருந்தாகவும், புற்று நோய், பல் நோய், இதய நோய், கண் நோய், மஞ்சள் காமாலை ஆகியவற்றிற்கு சிறப்பு மருந்தாகவும் பயன்படுகிறது.

தாய் உணவை மட்டும் அளித்து உடலை காப்பாள். ஆனால் கடுக்காய் உடலிலுள்ள நோய்களையும் விரட்டி அறுசுவையினையும் அளித்து உடலைக் காப்பதனால் தாய்க்கு மேலானவளாகக் கடுக்காய் சிறப்பிக்கப்படுகிறது.

## துணை நூற்பட்டியல்

1. முருகேச முதலியார். (1936). *குணபாடம் பொருட்பண்பு நூல் இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை.* சென்னை.
2. தியாகராசன், இரா. (2000). *சித்த மருத்துவம் சிறப்பு இந்திய மருத்துவம் ஓமியோ பதித்துறை.* சென்னை.
3. இராமசாமி. (2000). *அற்புத மூலிகைகள் ஆறுஅரசு சித்த மருத்துவக் கல்லூரி,* பாளையங்கோட்டை
4. மோகன் ஆர். சி. (1999). *திருவள்ளுவர் ஞானவெட்டியான் 150 (ப.ஆ).* சென்னை, தாமரை நூலகம் .
5. வெங்கடரா பாலு. (2011). *சித்தர்களின், காயகல்ப மூலிகைகள் ஆறு.* நர்மதா பதிப்பகம்.
6. ஸ்ரீவாசன், கு. (2010). *சங்க இலக்கியத் தாவரங்கள்.* தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்.
7. ராமச்சந்திரன், எஸ். பி. (1869). *போகர் நிகண்டு 1200 (ப.ஆ), மூலமும் உரையும்,* தாமரை நூலகம், சென்னை.
8. மணிவாசகர். (2009). *திருமந்திரம் மூலமும் உரையும்.*
9. ராமச்சந்திரன், எஸ். பி. (1869). *போகமுனிவர் வைத்திய காவியம் 100 (ப.ஆ)* தாமரை நூலகம், சென்னை.
10. புலியூர்கேசிகன். *புறநானூறு தெளிவுரை.* சென்னை, செண்பகா பதிப்பகம்.
11. சுந்தர சண்முகனார். (1989). *மருந்தாகித் தப்பா மர இனப்பெயர்கள்.* பைந்தமிழ் பதிப்பகம், புதுச்சேரி.